**சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிட்டட் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிட்டட்டின் ("கம்பனி") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல்இ தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல்இ அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான்

முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்இ நடைமுறைகள்இ புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பில் கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமத்துடன் தொடர்பான இணங்காமை | முகாமைத்துவ கருத்துதரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இ.க.நி. 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியினால் 25,297 எண்ணிக்கையிலான ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளை உள்ளடக்கிய ரூபா 8,388 மில்லியன் மதிப்பிடப்பட்ட முழுமையாக பெறுமானத் தேய்வடைந்த சொத்துக்கள் அதன் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பவற்றை மீளாய்வு செய்யாது பயன்படுத்தப்பட்டு | 2023 யூலை 05 இல் சி.பி.எஸ்.டி.எல் ஆதனங்களின் மதிப்பீட்டிற்காக அரச மதிப்பீட்டு திணைக்களத்திடம் இருந்து சேவையை பெற்றுக்கொள்வதற்கான அங்கீகாரத்தினை இயக்குனர் சபை வழங்கியது. 2023 திசெம்பர் 18 இல் அரச மதிப்பீட்டு திணைக்களத்துடன் உடன்படிக்கையினை கைச்சாத்திட்டது. கொலன்னாவ, முதுராஜவல, 11 இலக்கமுடைய தொகுதி டிப்போக்கள் மற்றும் சுற்றுலா இல்லம் என்பவற்றின் சொத்து | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருவதுடன் நியமத்தின் 79(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாத சொத்துக்களின் நியாயமான பெறுமதி பிரதிபலிக்கப்படவில்லை என்று அவதானிக்கப்படுகிறது. | அடிப்படை பெறுமதியிடல் செயன்முறையில் மதிப்பீட்டு திணைக்களம் காணப்படுகிறது. இன்றைய நிலவரப்படி காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியிடல் செயற்பாடு நிறைவடைந்துள்ளன. காணி மற்றும் கட்டிடங்களின் பகுதி தொடர்பில் விரிவான அறிக்கை 2024 யூன் 06 இல் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) இ.க.நி 16 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 13 மில்லியன் தொகையுடைய கம்பனியின் 133 ஆம் இலக்கமுடைய பவுசர் ப்லீட் (bowser fleet) இற்காக 2023 மார்ச் 31 இல் நிறைவு செய்யப்பட்ட GPS கண்காணிப்பு முறைமையினை நிறுவியமை தொடர்பில் கம்பனி மூலதனமாக்கப்படவில்லை. மாறாக, மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் நடைமுறை வேலையில் அந்த சொத்துக்கள் கணிப்பிடப்பட்டிருந்தது. | ஒரு கொள்கையாக, செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நிறைவுசெய்தலினை சுட்டிக்காட்டி பொறியியல் செயற்பாட்டினால் செயற்திட்ட நிறைவடைவு சான்றிதழ் வழங்கபட்டவுடன் மூலதன செயற்திட்டங்களின் கிரயத்தினை சீ.பி.எஸ்.டீ..எல் மூலதனமாக்கும். நிறைவுசெய்தல் சான்றிதழின் பெறுவனவு அல்லது செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்காக பயனாளர் செயற்பாட்டுக்கு பொறுப்பினை கையளித்தல் அல்லது மூலதன சொத்துக்களை பயன்படுத்தல் மூலம் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 471,542,929 மதிக்கத்தக்க செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதி மூலதனமாக்கபட்டிருந்தது. இரண்டு நடைமுறை வேலை மீதியான ரூபா 19,626,338 மற்றும் 13,118,308 என்பன 133 இலக்கமுடைய சீ.பி.எஸ்.டீ..எல் பவுசர் ப்லீட் இற்கான GPS கண்காணிப்பு முறைமையுடன் தொடர்புபட்டது. ஒப்பந்தக்காரரினால் வெற்றிகரமாக நிறைவு செய்த மொத்த செயற்திட்டம் மற்றும் உரிய பயனாளர் செயற்பாட்டிற்கு கையளிக்கப்பட்டது என்பன தொடர்பில் 2024 ஆம் ஆண்டின் போது மொத்த செயற்திட்டத்தின் கிரயம் மூலதனமாக்கப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனி அதன் நடைமுறை வேலை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தினை இனங்காண வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்தான மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் படி கம்பனிக்கான வருமான வரிப் பொறுப்பு, பெறுமதி கூட்டிய வரி மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரிப் பொறுப்பு முறையே ரூபா 364 மில்லியன், ரூபா 322 மில்லியன் மற்றும் ரூபா 13 மில்லியன் தொகைகளாக இருந்தன. மேலும், அந்த | சீ.பி.எஸ்.டீ..எல் பெறப்பட்ட சகல ஐ.ஆர்.டி மதிப்பீடுகளுக்கும் எதிராக மேன்முறையீடு செய்ததுடன், சீ.பி.எஸ்.டீ..எல் மூலம் எவ்வித பொறுப்போ அல்லது தண்டமோ எழப்படவோ அல்லது செலுத்தப்படவோ இல்லை. சட்ட நடைமுறைகளின் இறுதி தீர்மானம் கம்பனியின் நிதி நிலைமை அல்லது திரவத் தன்மையின் வெளியீடுகள் தொடர்பில் பொருண்மையான பாதக விளைவினை ஏற்படுத்தாது என்று முகாமைத்துவம் | கம்பனி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சாத்தியத்தை மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களில் பொருண்மை வாய்ந்த எதிர்பாராத பொறுப்புக்களினை வெளிப்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| மதிப்பீடுகளுக்கு எதிராக கம்பனி மேன்முறையீடு செய்தது. எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் எதிர்பாராத பொறுப்புக்கள் என அந்த பொருண்மையான வரி மதிப்பீடுகளை கம்பனி வெளிப்படுத்தவில்லை. | நம்புகின்றது. 2024 ஜனவரி 10 இல் பெறப்பட்ட ‘‘வரி செலுத்துபவர் அறிக்கையின் ஐ.ஆர்.டி மதிப்பீட்டு மட்ட விபரங்கள்’’ இன் படி IRD RAMIS முறைமையில் தரவு உள்ளீட்டு தவறு காரணமாக இந்த மீளளிப்புக்களின் பெரும்பாலானவை உருவாகுவதன் காரணமாக ஐ.ஆர்.டி முறைமையில் பல தவறுகளினால் பின்வரும் மொத்த தொகைகள் எதிர்மறை (மேலதிகம்) வரிகள் என்று காட்டப்பட்டுள்ளன. அதன்படி, இது தொடர்பில் எதிர்பாராத பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. | தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறுவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தபானத்திடம் (CPC) இருந்து பெற வேண்டிய தொகை ரூபா 7,357 மில்லியன் ஆக இருந்தது. எனினும், இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தபானத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொடர்புபட்ட செலுத்த வேண்டிய மீதி ரூபா 6,128 மில்லியனும், வித்தியாசம் ரூபா 1,229 மில்லியனும் இருந்தது என அவதானிக்கப்பட்டது. கம்பனி வித்தியாசங்களை இணக்கம் செய்திருந்ததுடன் இந்த வித்தியாசங்களுடன் இணங்குவதற்கு இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தபானத்துடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தது. அதன்படி, கம்பனி பரஸ்பரமாக தேறிய வேறுபாடு ரூபா 313 மில்லியன் தொகையுடன் உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்குகளில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை. | சீ.பி.சீ மற்றும் சீ.பீ.எஸ்.டீ.எல் நடைமுறைக் கணக்குகள் மீதிகளுக்கிடையிலான வேறுபாடு ரூபா 1,229 மில்லியன் தொகைக்கான இணக்கங்கள் கணக்காய்வுக்கு வழங்கப்பட்டது.<br><br>சீ.பி.சீ உடன் சர்ச்சைக்குரிய பரிமாற்றங்களின் பெரும்பாலானவற்றை தீர்ப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. கூட்டக் குறிப்புக்கள் மற்றும் சீ.பி.சீ மற்றும் சீ.பீ.எஸ்.டீ.எல் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானம் கணக்காய்விற்கு வழங்கப்பட்டு வருகின்றன.<br><br>மென்பொருள் மற்றும் ஏனைய தனியுரிமை தகவலை வழங்க, பரிமாற மற்றும் பயன்படுத்த 2023 திசெம்பர் 01 இல் சீ.பி.சீ , சீ.பீ.எஸ்.டீ.எல் மற்றும் எல்.ஐ.ஓ.சீ என்பவற்றுக்கிடையில் ERP மென்பொருள் சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் சீ.பி.சீ இனால் (ரூபா 53.5 மில்லியன்) கணக்கிடப்படாத SAP பராமரிப்பு விதிப்பனவுகளுக்காக (பயனாளர் அனுமதிப்பத்திர கட்டணங்கள்) 2010 ஏப்ரல் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் சீ.பி.எஸ்.டீ.எல் வழங்கி கொண்டிருந்தது. | கம்பனிகளுக்கு இடையிலான மீதிகளை இணக்கம் செய்வதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பனரிடமிருந்தும் மற்றும் அவர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை உரிய நேரத்தில் தீர்ப்பதற்கும் அல்லது வசூலிப்பதற்கும் உரிய நேரத்தில் கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2020 – 2023 காலப்பகுதிகளுக்காகவும் 2024 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களுக்காகவும் சீ.பீ.எஸ்.டீ.எல் இற்கு SAP பராமரிப்பு விதிப்பனவுகளினை (பயனாளர் அனுமதிப்பத்திர கட்டணங்கள்) ஏற்கனவே மீள்நிரப்பியுள்ளது.

காலத்திற்கு பின்னர். முழு கொடுப்பனவாக ரூபா 163 மில்லியன் மொத்த போக்குவரத்து (BTR) வருமானம் கிடைத்தது.

2003 மற்றும் 2019 ஆண்டுகளின் போது சீ.பி.சீ மற்றும் சீ.பீ.எஸ்.டீ.எல் என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் சீ.பி.சீ மூலம் சீ.பீ.எஸ்.டீ.எல் இடமிருந்து ஏற்பட்ட தாமத விதிப்பனவுகள் மற்றும் கசிவு நட்டங்கள் என்பவற்றை அறவீடு செய்வதற்கு ஏற்பாடுகள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை'' என்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரையுடன் சீ.பி.எஸ்.டீ.எல் உடன்படுகிறது. சீ.பி.சீ வரவு குறிப்பொன்றை வழங்கியுள்ளதுடன் சீ.பி.எஸ்.டீ.எல் இடமிருந்து முன் அங்கீகாரத்தினை பெறாமல் சீ.பி.எஸ்.டீ.எல் இடமிருந்து தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்ாக கணக்கீடு செய்துள்ளது.

எனவே, இந்த நோக்கத்திற்காக சீ.பி.எஸ்.டீ.எல் செயற்பாடுகள் மற்றும் சீ.பி.சீ இன் வர்த்தக பிரிவு என்வற்றிடமிருந்து உள்ளடக்கிய தாமதக் குழுவிற்கு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், குழுவினால் வழங்கப்படும் இறுதி தீர்மானத்தினை மதிப்பதற்கு சீ.பி.சீ அல்லது சீ.பி.எஸ்.டீ.எல் உடன்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியிடமிருந்து (LIOC) பெற வேண்டிய தொகை ரூபா 693 மில்லியன் ஆக இருந்தது. எனினும், எல்.ஐ.ஓ.சி மூலம் உறுதிப்படுத்தப்பட்ட மீதியின் பிரகாரம் இது ரூபா 289 மில்லியனாக இருந்ததுடன் வித்தியாசம் ரூபா 404 மில்லியன்

எல்.ஐ.ஓ.சீ மற்றும் சீ.பீ.எஸ்.டீ.எல் நடைமுறைக் கணக்குகள் மீதிகளுக்கிடையிலான வேறுபாடு ரூபா 403 மில்லியன் தொகைக்கான இணக்கங்கள் கணக்காய்வுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மொத்த உற்பத்தி நட்டத்திற்கான தீர்க்கப்படாத தாமதக் கொடுப்பனவின் சர்ச்சை தொடர்பில் செயற்பாட்டு

கம்பனிகளுக்கு இடையிலான மீதிகளை இணக்கம் செய்வதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பனரிடமிருந்தும் மற்றும் அவர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை உரிய நேரத்தில் தீர்ப்பதற்கும்

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. அதன்படி வித்தியாசங்களை இனங்காண்பதற்கு இணக்கங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் எல்.ஐ.ஓ.சி மூலம் ரூபா 301 மில்லியன் தொகையுடைய மொத்த போக்குவரத்து கட்டணங்களினை பரஸ்பரமாக உடன்பட்டிருக்கவில்லை. | முகாமையாளர் (பீ.எம் மற்றும் பீ.பி) 2021 பெப்ரவரி 01 ஆம் திகதியிட்ட அவரது கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட பதிலளிப்பினை தயவு செய்து பார்க்கவும்.<br><br>2022 நவம்பர் 24 இன் 14/231 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் சீ.பி.சீ மற்றும் எல்.ஐ.ஓ.சீ உடன் கைச்சாத்திடுவதற்கு முன்மொழியப்பட்ட புதிய உடன்படிக்கையின் 06 ஆம் இலக்க உட்பிரிவின் பிரகாரம் LBD எரிபொருள் விற்பனைகள் தொடர்பில் எல்.ஐ.ஓ.சீ இடமிருந்து ரூபா 300 மில்லியன் தொகையினை முனையங்களுக்கிடையிலான மொத்த எரிபொருள் போக்குவரத்து கட்டணங்களாக அறவீடு செய்வதற்கு இயக்குனர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி, சி.பி.எஸ்.டீ.எல் ரூபா 300 மில்லியன் பெறுமதிக்கான பட்டியல்களை உருவாக்கியுள்ளதுடன் இன்றைய திகதி வரை கொடுப்பனவுகள் செலுத்தப்படாமல் உள்ளது. தனிப்பட்ட விளக்கமளிக்கும் 2024 யூன் 12 ஆம் திகதியிட்ட கடிதமாகிய கொடுப்பனவினை விடுவிப்பு செய்யுமாறு கோரி முகாமை இயக்குனரினால் அனுப்பிய கடிதத்தினை தயவு செய்து பார்க்கவும். | அல்லது வசூலிப்பதற்கும் உரிய நேரத்தில் கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) சாதாரன வணிக செயற்பாடுகளில் விற்கப்பட்ட பண்டங்கள் அல்லது வழங்கபட்ட சேவைகளுக்காக வாடிக்கையாளர்களினால் செலுத்த வேண்டிய தொகையினை வியாபார பெறவேண்டியவைகள் பிரதிபலிக்கின்றது. எனினும், சினோபெக் எனேர்ஜி லங்கா லிமிட்டட்டிடமிருந்து பெறவேண்டிய ரூபா 243.7 மில்லியன் தொகையினை வியாபார பெறவேண்டியவைகளுக்கு பதிலாக ஏனைய பெறவேண்டியவைகள் என கம்பனி அறிக்கையிட்டிருந்தது. | சீ.பி.எஸ்.டீ.எல் ஆனது சினோபெக் எனேர்ஜி லங்கா லிமிட்டட்டினை பொது பயனாளர் வசதி சேவைகளின் ஏற்பாட்டுக்கான பங்குரிமையாளர் அல்லாத வணிக பங்காளராக வகைப்படுத்துகிறது.<br><br>எதிர்காலத்தில் சிறந்த விளக்கத்திற்காக தனியான வகையின் கீழ் பங்குரிமையாளர் அல்லாத வணிக பங்காளரிடமிருந்து வியாபார பெறவேண்டியவை என்று வகைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் வியாபார பெறவேண்டிய மீதிகளினை சரியாக கம்பனி வகைப்படுத்த வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டியகைள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் சீ.பி.சீ இற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 301 மில்லியன் ஆக இருந்தது. எனினும், சீ.பி.சீ இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியிடம் இருந்து பெறவேண்டிய தொகை ரூபா 228 மில்லியன் ஆக இருந்தது. அதன்படி, 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக இந்த இரு மீதிகளுக்கிடையிலான தேறிய வித்தியாசம் ரூபா 73 மில்லியன் அவதானிக்கப்பட்டது. எனினும், சீ.பி.சீ மூலம் பதிவு செய்யப்பட்ட ரூபா 173.6 மில்லியன் தொகையுடைய மொத்த கொடுக்கல் வாங்கல்கள் மேற்கூறிய வித்தியாசத்திற்கு வழிவகுத்ததினை பரஸ்பரமாக உடன்படிவில்லை என்பதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கம்பனியின் நிதி பதிவேடுகளில் பதிவு செய்யப்படவில்லை. | எல்.ஐ.ஓ.சீ மற்றும் சீ.பி.எஸ்.டீ.எல் நடைமுறைக் கணக்குகள் மீதிகளுக்கிடையிலான வேறுபாடு ரூபா 73.1 மில்லியன் தொகைக்கான இணக்கங்கள் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்பட்டது. | கம்பனிகளுக்கு இடையிலான மீதிகளை இணக்கம் செய்வதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பனரிடமிருந்தும் மற்றும் அவர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை உரிய நேரத்தில் தீர்ப்பதற்கும் அல்லது வசூலிப்பதற்கும் உரிய நேரத்தில் கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 17 ஆம் திகதியன்று அரச தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான கூட்டிணைப்பு நல்லாளுகை வழிகாட்டுதல்களின் 2.3 ஆம் பிரிவு | கம்பனியினால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (தாய்) மற்றும் பொது திறைசேரிக்கு முடிவுறுத்தப்பட்ட தந்திரோபாய திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. | தந்திரேபாய திட்டம் 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இரு முறை இறுதியாக்கப்பட்டுள்ள போதிலும் முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக அங்கீகாரம் பெறப்படவில்லை. எனினும், 2024-2028 வரையான புதிய கூட்டிணைப்பு திட்டம் இறுதியாக்கப்பட்டுள்ளதுடன் அடுத்து வரும் சபை அங்கீகாரத்திற்காக தலைவரினால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.<br><br>எனினும், சீ.பி.எஸ்.டீ.எல் அதன் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தினை அமைச்சுக்கு சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதனை உறுதிப்படுத்தியதுடன், இது காலாண்டு செயன்முன்னேற்ற மீளாய்வுகளையும் மேற்கொண்டது. அமைச்சு அதன் பின்னர் சீ.பி.எஸ்.டீ.எல், சீ.பி.சீ, பி.ஆர்.டி.எஸ் மற்றும் தன்னுடைய அமைச்சின் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டங்களினை மீளாய்விற்கும் மேற்பார்வைக்கும் திறைசேரிக்கு அனுப்பியது.<br><br>சீ.பி.எஸ்.டீ.எல் சபை அங்கீகரித்த வருடாந்த பாதீட்டு கூற்றுக்களை சீ.பி.சி இற்கு அனுப்பியுள்ளது. | கம்பனி உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அதன் தந்திரோபாய பணிப்புரை என்பவற்றுடன் இணங்கும் வகையில் அதன் தந்திரேபாய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு தந்திரோபாய திட்டத்தினை கொண்டிருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டிற்கான வரிக்கு முன் செயற்பாட்டு விளைவு ரூபா 314.5 மில்லியன் நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 704.1 மில்லியனாக இருந்தது. எனவே நிதி விளைவுகளில் ரூபா 389.6 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. டேர்மினல் வருமானம் ரூபா 534.7 மில்லியன் தொகையினாலும், போக்குவரத்து வருமானம் ரூபா 230.2 மில்லியன் தொகையினாலும், ஊழியர் கடன் மீது வட்டி ரூபா 136.6 மில்லியன் தொகையினாலும் மற்றும் ஆய்வுகூட பரிசோதனை கட்டணங்கள் ரூபா 76.7 மில்லியன் தொகையினாலும் அதிகரித்தமையே இம்முன்னேற்றத்துக்கான காரணங்கள் ஆகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முந்தைய நான்கு ஆண்டுடன் (04) ஒப்பிடுகையில் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு, அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வருடம்<br>வரிசை உருப்படி | | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| **வருமானம்** | **ரூ.மில்லியன்** | **10,150** | **9,433** | **14,276** | **12,568** | **15,340** |
| விலகல் | ரூ.மில்லியன் | 717 | (4,843) | 1,708 | (2,772) | 2,210 |
| விலகலின் சதவீதம் | % | 7.6 | (33.9) | 13.5 | (18) | 16.8 |
| **நேர்க் கிரயம்** | **ரூ.மில்லியன்** | **(6,846)** | **(6,806)** | **(8,369)** | **(7,634)** | **(8,580)** |
| விலகல் | ரூ.மில்லியன் | 40 | (1,563) | 753 | (946) | 677 |
| விலகலின் சதவீதம் | % | 0.58 | (18.6) | 09.6 | (11) | 8.6 |
| **ஏனைய செயற்பாட்டு வருமானம்** | **ரூ.மில்லியன்** | **1,180** | **1,309** | **706** | **573** | **852** |
| விலகல் | ரூ.மில்லியன் | ( 129) | **603** | **133** | **(279)** | **148** |
| விலகலின் சதவீதம் | % | (09.8) | 85.4 | 23.2 | (32.75) | 21 |
| **நிர்வாக செலவினங்கள்** | **ரூ.மில்லியன்** | **(5,098)** | **(4,925)** | **(5,061)** | **(4,463)** | **(4,937)** |
| விலகல் | ரூ.மில்லியன் | 173 | (136) | (598) | (474) | 410 |
| விலகலின் சதவீதம் | % | 3.5 | (2.6) | 13.4 | (9.6) | 9 |
| **நிதி வருமானம்** | **ரூ.மில்லியன்** | **307** | **285** | **202** | **309** | **323** |
| விலகல் | ரூ.மில்லியன் | 22 | 83 | **(107)** | **(14)** | **205** |
| விலகலின் சதவீதம் | % | 7.7 | 41 | (34.6) | (4.3) | 173.7 |
| **ஆண்டுக்கான இலாம்** | **ரூ.மில்லியன்** | **(315)** | **(704)** | **1,578** | **2,138** | **2,289** |
| விலகல் | ரூ.மில்லியன் | 389 | **(2,282)** | **(560)** | **(151)** | **767** |
| விலகலின் சதவீதம் | % | 55.2 | (144.6) | (26) | (6.6) | 50 |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய நான்கு (04) ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது முக்கிய விகிதங்கள் மற்றும் காரணங்களுடன் கூடிய பிரதான அவதானிப்புக்கள் மற்றும் அதன் தாக்கம் பின்வருமாறு.

| வருடம் / விகிதம் | | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| **இலாபத் தன்மை விகிதங்கள்** | | | | | | |
| மொத்த இலாப விகிதம் (GP) | % | 32.55 | 27.9 | 41.38 | 43.73 | 44.07 |
| செயற்பாட்டு இலாப விகிதம் | % | (6.12) | (10.49) | 9.64 | 13.48 | 12.82 |
| தேறிய இலாபம;/(நட்டம்) விகிதம் | % | (3.10) | (7.46) | 11.06 | 15.76 | 14.92 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | | | | |
| நடைமுறை விகிதம் | தடவை | 6.62 | 5.36 | 5.7 | 8.66 | 6.95 |
| விரைவு விகிதம் | தடவை | 6.23 | 5.06 | 5.46 | 8.24 | 6.61 |
| **முதலீட்டு விகிதம்** | | | | | | |
| சொத்துக்கள் மீது திரும்பல் (ROA) | % | (0.96) | (2.09) | 4.74 | 6.67 | 7.04 |
| ஒரு பங்கிற்கான உழைப்பு | (ரூபா) | 0.05 | (1.41) | 1.56 | 2.64 | 1.74 |
| **உந்துதல் விகிதம்** | | | | | | |
| உரிமைக்கு கடன் விகிதம் | தடவை | 0.22 | 0.23 | 0.21 | 0.20 | 0.22 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்.கள்

| கணக்காய்வுவிடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி யூரோ 44,911 கிரயத்தில் திம்பில்ஸ் (thimbles) உடன் 02 மூரிங் ஹவ்ஸர்களை (Mooring Hawsers) இறக்குமதி செய்ததுடன் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இவை கம்பனிக்கு கையளிக்கப்பட்டன. மேலும், கம்பனியின் எண்ணெய் வசதிகள் பிரிவின் வெளியக பண்டகசாலையில் பாதுகாப்பற்ற களஞ்சியப்படுத்தல் காரணமாக பயன்பாட்டிற்கு மேலால் ரூபா 13 மில்லியன் மதிக்கத்தக்க ஒரு மூரிங் ஹவ்ஸர் சேதமடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. எனவே, ஹவ்ஸர் எந்த நிபந்தனைகளின் கீழ் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த கம்பனி கருத்திற்கொள்ளப்படவில்லை | குறிப்பிடப்பட்ட மூரிங் ஹவ்ஸர் இலங்கைக்கு அனுப்பப்படும் போது (மற்றைய மூரிங் ஹவ்ஸர் உடன்) எண்ணெய் வளங்கள் அலுவலகத்தின் (OFO) களஞ்சியப்படுத்தும் இடங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்து. விஷேடமாக கச்சா எண்ணெய் SPBM (SPBM 1) இன் மாற்றியமைத்தல் அட்டவணைப்படுத்தப்பட்டதன் காரணமாக அண்ணளவாக ரூபா 350 மில்லியன் மதிக்கத்தக்க உதிரிபாகங்கள் OFO இல் இந்த மாற்றியமைப்பிற்காக களஞ்சியப்பட்டிருந்தது. இவைகளில் பெரும்பாலானவை திறந்த வெளி பண்டகசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>எனவே, கொலன்னாவ டேர்மினல் இன் பிரதான களஞ்சியங்களில் இந்த இரு எண்ணிக்கையிலான மூரிங் ஹவ்ஸர்களினை களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் நிறுவுவதற்கு தேவை | கம்பனியின் ஆதனங்களுக்கு ஏதாவது சேதங்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும் மற்றும் ஏதாவது கவனயீனங்களினை அல்லது இது தொடர்பில் ஈடுபட்ட அலுவலர்களின் செயற்திறனின்மையினை கண்டறிய புலனாய்வினை முன்னெடுப்பதற்கு தேவையான தடுப்பு நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுக்க வேண்டியதோடு தேசமடைந்த ஆதனத்தினை மீட்டெடுப்பதற்கும் |

என்பதுடன் களஞ்சியத்தின் போது சேதங்களை தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, இது திறந்த வெளியில் உள்ள அதிக மதிப்புள்ள இருப்பு மற்றும் கடல்சார் செயற்பாடுகள் தொடர்பான சொத்துக்கள் என்பவற்றை பயன்படுத்துகின்ற போதும் கம்பனி இந்த அலகுகளை உள்ளடக்கி ஒரு நிகழ்நிலை இருப்பு கண்காணிப்பு முறைமைகளினை நிறுவவில்லை.

ஏற்படும் போது கொழும்பு துறைமுகத்தில் உள்ள எண்ணெய் வளங்கள் அலுவலகத்திற்கு அவைகளை கொண்டு வர திட்டமிடப்பட்டிருந்தது.

எண்ணெய் வளங்கள் அலுவலகத்தின் ஊழியர்களினால் ஹவ்ஸர்கள் பரிசோதிக்கப்பட்டதுடன், விநியோகிக்கப்பட்டதன் பின்னர் எவ்வித சேதங்களும் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.

நடைமுறையில் உள்ள செயற்பாட்டு வாழ்வினை கருத்திற்கொண்டு ஏதாவது அவசரமாக ஹவ்ஸர் செயலிழக்கவில்லை என்றால் அடுத்த ஹவ்ஸர் நிறுவுதல் 2024 ஏப்ரல் 25 இல் இருந்தது.

எனினும், 2023 ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதத்தின் போது பல தடவைகள் எண்ணெய் வளங்கள் அலுவலகத்திற்கு எஞ்சிய ஹவ்ஸர்களினை கொண்டு வருவதற்கு எண்ணெய் வளங்கள் அலுவலகத்திடம் பிரதான களஞ்சியசாலை அறிவித்திருந்தது.

தொடர்ச்சியான கோரிக்கைகளை கருத்திற்கொண்டு 2023 செப்தெம்பர் 15 இல் எண்ணெய் வளங்கள் அலுவலகத்திற்கு ஹவ்ஸர் கொண்டு வரப்பட்டு தங்குமிடம் உள்ள இடத்தில் மாத்திரம் இறக்கப்பட்டதுடன் மழை மற்றும் சூரியக் கதிர்களிடம் இருந்து ஹவ்ஸரினை பாதுகாக்கக்கூடிய பூம் ட்ரக் (boom truck) மூலம் அணுக முடிந்தது.

இறக்கிய பின்னர் எவ்வித சேதமும் இல்லை என்று எண்ணெய் வளங்கள் அலுவலகம் உறுதிப்படுத்தியது.

எண்ணெய் வளங்கள் அலுவலகத்தின் களஞ்சியப்படுத்தும் இடத்தினை அவதானிக்கும் போது பல திறந்த களஞ்சியப்படுத்தும் இடங்கள் காணப்படுவதுடன், சில மூடிய இடங்கள் மாத்திரமே பூட்டக்கூடியதாகும்.

கைமுறையாக நகர்த்தக்கூடிய சிறிய மற்றும் இலகுவான உருப்படிகளுக்காக மூடிய களஞ்சியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
சுமை மற்றும் பரிமாண வரையறைகள் மற்றும் தனிப்பட்ட அல்லது இயந்திரம் சார் பாதுகாப்பு என்பவற்றினை கருத்திற்கொண்டு ஹவ்ஸர் போன்றதினை கையாள்வதற்காக மிகப்பெரிய பூட்டிய இடத்தை கூட ஒரு பூம் ட்ரக் (boom truck) மூலம் அணுக முடியாது.

பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனினும், சில சந்தர்ப்பங்களில், பூம் ட்ரக் கையாள்வதின் பாதுகாப்பு வரையறைகளுக்கு முரணாக குறிப்பிடப்பட்ட களஞ்சியத்தில் ஹவ்ஸர்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

சாதாரனமாக உயர் மதிப்புள்ள கடல்சார் குழல்களை (அதிகபட்சம் ஒவ்வொன்றும் 48 எண்ணிக்கையிலான குழல்கள் அண்ணளவாக அல்லது ரூபா 20 மில்லியளுக்கு மேல் மதிக்கத்தக்கவை) பாதுகாப்பு ஊழியர்களால் பாதுகாக்கப்பட்ட திறந்த வெளியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான மாற்று அடிப்படையில் ஆதனம் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக ஒரு நாளில் சகல நேரமும் எண்ணெய் வளங்கள் அலுவலகத்திற்கு 12 எண்ணிக்கையிலான பாதுகாப்பு தரப்பினர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

உட்படுத்தப்பட்ட ஹவ்ஸரும் அதே வழியில் ஆனால் மழை மற்றும் சூரிய கதிர்களுக்கு தேவையான இருப்பிடத்துடன் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இது கடந்த காலத்தில் பெரும்பாலான நேரங்களில் ஒரு நடைமுறையாகவே செய்தது.

SPBM 1 மற்றும் SPBM 2 ஆகிய இரண்டிற்கும் குறைந்தபட்சம் இரு உதிரி ஹவ்ஸர்களை எண்ணெய் வளங்கள் அலுவலகம் கொண்டிருக்க வேண்டும். எனவே, ஒரு நேரத்தில் எண்ணெய் வளங்கள் அலுவலகத்தில் அதிகபட்சம் 4 எண்ணிக்கையிலான ஹவ்ஸர்கள் இருக்க முடியும். ஆனால் அத்தகைய எண்ணிக்கைக்காக பூட்டக்கூடிய களஞ்சியப்படுத்தும் வசதிகள் காணப்படவில்லை என்பதுடன் நீண்ட காலமாக அவைகளுக்கு திறந்த வெளி களஞ்சியப்படுத்தல் முறை நடைமுறையில் உள்ளன. அத்தோடு அத்தகைய களஞ்சியப்படுத்தலில் சேதமாக எதுவும் இடம்பெறவில்லை.

அதே நேரத்தில் பழுதுபார்ப்பதற்காக பழுதுபார்க்கும் இடத்தில் எண்ணெய் வளங்கள் அலுவலகத்திற்கும் பூம் ட்ரக் (227-7396) இணைக்கப்பட்டுள்ளது.

குறைந்த நீள டைலர் கொண்ட பொறியியல் செயற்பாட்டின் பழைய பூம் ட்ரக் (42-5215) போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட வேண்டியிருந்தது. எனவே, மரப் பெட்டி

(wooden box) இன்றி ஹவ்ஸர் ஏற்றப்பட்டது (ட்ரக்கின் பரிமாண வரையறைகள் காரணமாக பெட்டியுடன் ஹவ்ஸரினை ஏற்றுவதற்கு இது சாத்தியமாக இருக்கவில்லை).

அதற்கு மேலதிகமாக, அந்த நேரத்தில் தண்ணீர் உடன் பெட்டி நிரப்பப்பட்டிருந்ததுடன், ஹவ்ஸரினை மாற்றுவதற்கு அனுப்பிய எண்ணெய் வளங்கள் அலுவலகத்தின் களஞ்சிய காப்பாளரினால் இது உறுதிப்படுத்தப்பட்டது.

ஆகையினால், எண்ணெய் வளங்கள் அலுவலகத்தின் அறிவுறுத்தல்களுடன் கொலன்னாவை டேர்மினலில் இருந்து எண்ணெய் வளங்கள் அலுவலகத்திற்கு பழைய பூம் ட்ரக் (227-7396) மூலம் ஹவ்ஸர் பொதிசெய்யாமல் போக்குவரத்து செய்யப்பட்டது.

சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தபனம் எண்ணெய் வளங்கள் அலுவலக பரப்பில் கடல்சார் குழல்களுக்காக பண்டகசாலை ஒன்றினை நிர்மாணிக்க முயற்சி செய்தது. ஆனால், SLPA இற்கு சொந்தமாக நிலப் பிரச்சினை காரணமாக இது தொடரப்படவில்லை.

எண்ணெய் வளங்கள் அலுவலகம் பல தடவை CCTV கண்காணிப்பு முறைமையினை கோரியுள்ளது. இது வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்படாமையினால் பல ஆண்டுகளாக அங்கீகரிக்கப்படவில்லை.

மேலும், எண்ணெய் வளங்கள் அலுவலகத்திற்கு CCTV கண்காணிப்பு முறைமை கட்டாயமானதொரு தேவை என சர்வதேச கப்பல்கள் மற்றும் துறைமுக பாதுகாப்பு அலுவலகம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டது.

எனினும், இந்த சம்பவத்திற்கு பிறகு CCTV முறைமைக்காக சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பெறுகை செயற்பாடு செயன்முன்னேற்றத்தில் உள்ளது. மேலும், தற்காலிகமாக களஞ்சியங்களை கொள்வனவு செய்தலும் செயன்முன்னேற்றத்தில் உள்ளன.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அரசாங்கம் (GOSL), சீ.பி.சீ மற்றும் எல்.ஐ.ஓ.சீ என்பவற்றுக்கிடையில் 2023 திசெம்பர் 30 அன்று கைச்சாத்திடப்பட்ட பொது பயனாளர் வசதிகள் பங்குரிமையாளர் உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியின் பிரதான வணிக செயற்பாடு 02 பிரதான டேர்மினல்ஸ் மற்றும் 11 துணை டிப்போக்கள் ஊடாக சீ.பி.சீ மற்றும் எல்.ஐ.ஓ.சீ என்வற்றுக்கு சொந்தமான எரிபொருள் இருப்புக்களினை களஞ்சியப்படுத்துவதும் அவைகளை அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு பங்கீடு செய்வதும் மற்றும் எரிபொருள் இருப்புக்கு சொந்தமான அந்த கம்பனிகளின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் நாடு பூராகவும் வாடிக்கையாளர்களை பரப்புதலும் ஆகும்.<br><br>வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர்களிடம் இருந்து எரிபொருள் கட்டளைகளை ஏற்றுக்கொள்ளல், கடன் எல்லைகள் மற்றும் முன்தகைமைகளை உறுதிப்படுத்தல், பட்டியல்களை வழங்குதல், வர்த்தகர்களிடம் இருந்து பணத்தினை சேகரித்தல் போன்ற சீ.பி.சீ இன் அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு பெற்றோலிய உற்பத்தி பொருட்களினை வழஙகல் செயன்முறையின் பிரதான நடவடிக்கைகள் கம்பனியினால் முன்னெடுக்கப்படும் சீ.பி.சீ இன் சந்தைப்படுத்தல் பிரிவினால் கையாளப்பட்டிருக்க வேண்டும். ஆகையினால், கம்பனி பெற்றோலிய உற்பத்திபொருட்களின் களஞ்சியம் மற்றும் விநியோகிப்பின் அதன் பிரதான நோக்கெல்லை வெளியக பணிகளில் ஈடுபடுத்தியிருந்தது. மேலும், பொது பயனாளர் வசதிகள் பங்குரிமையாளர் உடன்படிக்கையினால் அத்தகைய நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 யூன் 11 ஆம் திகதி இடம்பெற்ற சீ.பி.சீ மற்றும் சீ.பி.எஸ்.டீ.எல் முகாமையாளர் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.<br><br>பணியின் போலியினை தவிர்ப்பதற்கு 2024 யூலை 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் சீ.பி.எஸ்.டீ.எல் கட்டளைகள் செயற்பாட்டு மூலம் மேற்கொள்ளப்படும் சீ.பி.சி மொத்த எரிபொருள் விற்பனைகளின் கட்டளை செயன்முறை நடவடிக்கைகளை கைவிடுதல்.<br><br>2024 யூலை 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் SAP ERP நாளாந்த மொத்த எரிபொருள் விற்பனைகள் கட்டளைகளை புதுப்பிப்பதற்கும் மற்றும் வெளியக விநியோக கட்டளைகளை உருவாக்குவதற்கும் சீ.பி.சி நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் பிரதேச அலுவலக உழியர் பொறுப்பெடுக்க வேண்டும்.<br><br>மொத்த எரிபொருள் விற்பனைகளின் செயன்முறையில் தேவையற்ற தாமதங்களினை தவிர்ப்பதற்காக CPSTL IT செயற்பாட்டினால் அபிவிருத்தி செய்யப்பட்ட தொலைபேசி செயலி ஊடாக சகல வர்த்தகர்களக்கு அவர்களின் மொத்த எரிபொருள் கட்டளைகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல்களை வழங்க சீ.பி.சீ அல்லது சந்தைப்படுத்தல் முகாமையாளரிடம் நிர்வாக இயக்குனர் அறிவுறுத்தியது. | முகாமைத்துவம் அதன் அவசியத்தின் அடிப்படையில் கம்பனியின் நோக்கெல்லையை தீர்மானித்து அதன்படி பணியாற்ற வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை அரசாங்கம் மற்றும் LIOC என்பவற்றுக்கிடையில் 2007 ஜனவரி 05 ஆம் திகதிய தீர்ப்பனவு உடன்படிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் LIOC மூலம் அதன் சீன விரிகுடா (China Bay) நிறுவுதலில் இருந்து பெற்றோலிய உற்பத்திப்பொருட்களின் விநியோகம் செய்வது நாட்டின் பெற்றோலிய உற்பத்திப்பொருட்களின் செயல்வீதத்தின் அதிகபட்சம் 05 சதவீதம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன், சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து விநியோகம் செய்யப்படுவதை தவிர்த்து சீ.பி.சீ மூலம் பெற்றோலியப் பொருட்களின் விநியோகம் அதிகபட்சம் 05 சதவீதம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியினால் விநியோக செயன்முறையை கண்காணிப்பதற்கு தகுந்த முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, கம்பனியின் செயல்வீத கட்டணங்களில் இருந்து வருமானத்தினை இழக்கும் இடர் காணப்பட்டது. | இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பெற்றோலிய தொழில்துறையில் புதிதாக நுழையும் தரப்பினர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கு சினோபெக் எனேர்ஜி லங்கா (பிறைவேட்) லிமிட்டட், ஆர்.எம் பார்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் யுனைடட் பெற்றோலியம் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் என்பவற்றுடன் ''களஞ்சியம் மற்றும் விநியோகம்'' (முன்னர் CUF என அழைக்கப்பட்டது) உடன்படிக்கையினை CPSTL கைச்சாத்திட்டது.<br><br>மேற்குறிப்பிட்டதற்கு மேலதிகமாக CPC மற்றும் CPSTL என்பன 2024 யூன் 03 இல் CUF உடன்படிக்கைக்கு பிற்சேர்கையொன்றினை கைச்சாத்திட்டது. பங்குரிமையாளர்களுடன் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட உடன் 2003 மற்றும் 2007 இல் CPC மற்றும் LIOC உடன் கைச்சாத்திடப்பட்ட சகல உடன்படிக்கைகளும் முன்னைய ஒப்பந்தங்களினை முறியடிக்கும்.<br><br>CPSTL இன் செயல்வீத வருமானத்தினை இழக்கும் இடரினை பாதுகாக்க CPSTL இற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட குறைந்தபட்ச செயல்வீத அளவிற்கு ''களஞ்சியம் மற்றும் விநியோகம்'' உடன்படிக்கைகளில் புதிய உட்பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | கம்பனியின் வருமானத்தினை பாதுகாக்கும் நோக்கில் CUF உடன்படிக்கைக்கு இணங்க பெற்றோலிய பொருட்களின் விநியோகத்தை கண்காணிப்பதற்கு தகுந்த முறைமையொன்றினை கம்பனியின் முகாமைத்துவம் அமுல்படுத்த வேண்டும். |
| (ஆ) சீ.பி.சீ, எல்.ஐ.ஓ.சீ மற்றும் சீ.பி.எஸ்.டீ.எல் என்பவற்றுக்கிடையில் பொது பயனாளர் வசதிக்கான பங்குரிமையாளர் உடன்படிக்கை மற்றும் பங்கு விற்பனைகள் கொள்வனவு உடன்படிக்கை என்பன 2008 திசெம்பர் 31 இல் காலாவதியாகியிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகையினால், முடிவுக் கட்டணம் மற்றும் பலகை (slab) கட்டணம் உட்பட போக்குவரத்து கட்டணங்களை சேகரிப்பினை தீர்மானிக்க பயன்படுத்தப்படும் விலை சூத்திரம் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களின் | சீ.பி.சீ, எல்.ஐ.ஓ.சீ மற்றும் சீ.பி.எஸ்.டீ.எல் என்பவற்றுக்கிடையில் 2003 மற்றும் 2007 இல் கைச்சாத்திடப்பட்ட பொது பயனாளர் வசதி (CUF) உடன்படிக்கைகளை 2019 மற்றும் 2024 ஆண்டின் போது சீ.பி.சீ உடன் கைச்சாத்திடப்பட்ட புதிய உடன்படிக்கைகள் மற்றும் சினோபெக், ஆர்.எம் பார்க்ஸ் (மற்றும் யுனைடட் என்பவற்றுடன் கைச்சாத்திடப்பட்ட ''களஞ்சியம் மற்றும் விநியோகம உடன்படிக்கைகள் என்பன முறியடிக்கும்.<br><br>CPC உடன் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி 2024 யூலை | சந்தையில் உள்ள போட்டியாளர்களுக்கிடையில் ஒத்திசைவினை பேணுவதற்கு சகல தரப்பினர்களுடன் பொது பயனாளர் வசதி (CUF) உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கையுடன் திருத்தப்படவில்லை என்று 2011 முதல் அவதானிக்கப்படுகிறது. | மாதத்தின் போது LIOC உடன் கைச்சாத்திடுவதற்கு புதிய உடன்படிக்கையொன்று முன்மொழிந்துள்ளது.<br><br>அதன்பிறகு, எதிர்காலத்தில் CPSTL ஊடாக நிர்வகிகப்படும் குறைந்தபட்சம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட செயல்வீத அளவுடன் நாட்டில் உள்ள சகல 05 போட்டியாளர்களுக்கும் CPSTL செயல்வீத கட்டணங்கள் சமமாக பொருந்தும். | |
| (இ) கம்பனியினால் பராமரிக்கப்படும் ஒன்பது மொத்த டிப்போக்கள் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட காணிகளின் ஒப்பந்த அடிப்படையின் கீழ் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தக் காணிகளைப் பயன்படுத்துவதற்கு இலங்கை புகையிரத திணைக்களத்துடனான குத்தகை உடன்படிக்கை 2013 திசெம்பர் 31 இல் காலாவதியாகியிருந்தது. இருப்பினும், ஒப்பந்த உடன்படிக்கையை மீளாய்வு செய்யாமல் அல்லது புதிய உடன்படிக்கையினை கைச்சாத்திடாமல் தற்போதும் பயன்படுத்துகின்றது. | வேறு ஒரு தெரிவு காணப்படாமையினாலும் டிப்போவின் செயற்பாட்டினை தொடர்ச்சியாக கொண்டு செல்ல வேண்டியமையினாலும் குத்தகை உடன்படிக்கை காலாவதியான பிறகும் கம்பனி CGR நிலத்தினை பயன்படுத்துவதை தொடர்ந்தது. 2014 இற்குப் பின்னர் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்களை உள்ளடக்கி மதிப்பீட்டை மேற்கொண்டதன் மூலம் CGR ஒப்பந்த வாடகையினை 100 சதவீதத்திற்கு மேலால் அதிகரித்தது. நியாயமற்ற ரீதியில் அதிகரிக்கப்பட்ட ஒப்பந்த வாடகைகளினை செலுத்த கம்பனி உடன்படாமையினால் CGR இனால் சரியான மதிப்பீடு செய்யப்படும் வரை 2014 ஜனவரி 01 முதல் 2021 திசெம்பர் 31 வரை நடைமுறையில் உள்ள வீதத்தில் சபை அங்கீகாரத்துடன் குத்தகை வாடகைகள் செலுத்தப்பட்டன. குத்தகை ஒப்பந்தங்களை பின்னோக்கிய விளைவுடன் செயற்படுத்த CGR உடன்படிவில்லை. கடந்த 08 வருடங்களுக்கான ஒப்பந்த வாடகைகளின் நிலுவைகள் செலுத்துவது தொடர்பில் 2023 முதல் 05 ஆண்டு காலப்பகுதி வரை குத்தகை உடன்படிக்கைகளை செயற்படுத்த அவர்கள் சம்மதித்தனர். கொடுப்பனவு சிக்கல் தீர்க்கப்படும் வரை ஒப்பந்த உடன்படிக்கைகள் செயற்படுத்துவதை நிறைவேற்ற முடியாதுள்ளது. CGIR ஏற்கனவே 2027 திசெம்பர் 31 வரையான வரைவு ஒப்பந்த உடன்படிக்கையினை அனுப்பியுள்ளது. | CGIR உடன் பரஸ்பரமாக நன்மை பயக்கக்கூடிய ஒப்பந்தத்தில் நுழைவதன் மூலம் CGIR நிலத்தின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்த தேவையான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையில் உள்ள தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் வலயம் 06 - கொலன்னாவை எண்ணெய் முனையத்தில் புதிய பம்ப் ஹவுஸ் நிர்மாணத்தினை கம்பனி தொடங்கியது. தனியான நிர்மாண பொதியாக பம்ப் ஹவுஸினை நிர்மாணிப்பதற்கு பதிலாக பம்ப் ஹவுஸ் கட்டிட நிர்மாணம், குழாய் உதவி நிர்மாணம், மின்னியல் பொருத்துகை, யார்ட் (yard) அபிவிருத்தி, எளிமையான கூடை வடிகட்டி தயாரிப்பு போன்ற 05 வெவ்வேறான நிர்மாணங்களாக இந்த பணியினை கம்பனி துண்டாக்கியதுடன், இந்த 05 நிர்மாண பணிகளையும் 05 வெவ்வேறு ஒப்பந்தக்காரர்களுக்கு கம்பனி வழங்கியிருந்தது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது குழாய் ஹவுஸ் கட்டிட நிர்மாணம், மின்னியல் பொருத்துகை, யார்ட் அபிவிருத்தி என்பவற்றின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டது. எனினும், குழாய் உதவி நிர்மாணம் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நிறைவு செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. அதன் விளைவாக, பம்ப் ஹவுஸ் குறித்துரைக்கப்பட்ட பயன்பாட்டுக்கான நிலையில் காணப்படவில்லை. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரை நிர்மாணத்திற்காக ரூபா 97 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட மனுதாரர்களிடம் இருந்து கிரய விளைதிற நன்மையை பெறுவதற்காக CPSTL நிர்மாணத்தினை துண்டாக்குவதனால் மின்னியல் சிவில் மற்றும் இயந்திரவியல் ஒப்பந்தக்காரர்கள் நியாயமான கிரயத்துடன் அவர்களின் தொடர்புடைய ஒப்பந்தத்தில் பங்குபற்ற முடியும். இல்லையெனில், இது சிவில் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டால் மின்னியல் மற்றும் இயந்திரவியல் வேலைக்காக மேலதிக கிரயத்தை உள்ளடக்குவார். 6 வலயத்தில் பம்ப் ஹவுஸ் கட்டிட பொருள் நிர்மாணம் இருந்த போதிலும், குழாய் அகழி மற்றும் யார்ட் அபிவிருத்தியின் நிர்மாணம், வடிகட்டிகள் கொள்வனவு என்பன திட்டமிட்ட படி நிறைவு செய்யப்பட்டது. இறுதி துண்டான “ குழாய் உதவிகள் மற்றும் குழாய் முறைமையின் தொடர்புடைய கட்டமைப்புக்களின் நிர்மாணங்கள்” எம்.எஸ் ஆர்.எஸ். ப்ரொஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்ற ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது. சந்தையில் ஸ்டீல் (steel) மற்றும் ஏனைய உருப்படிகளின் கடுமையான விலை அதிகரிப்பு காரணமாக 2021 திசெம்பர் 06 ஆம் திகதியிடப்பட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் வெளியிடப்பட்ட உச்சவரம்பு எல்லையினை (20 சதவீதம்) கருத்திற்கொள்ளாமல் ஒப்பந்தக்காரர் விலை அதிகரிப்பை கோரினார். அதன்படி, 2023 மார்ச் 07 இல் ஒப்பந்தத்தை நிறுத்தவேண்டிய கட்டாயம் CPSTL இற்கு ஏற்பட்டது. நீண்ட தடவை கலந்துரையாடல்கள் மற்றும் விலை அதிகரிப்பு அங்கீகாரங்களின் பின்னர் 2024 ஜனவரி 24 ஆம் திகதிய பாதீட்டு மேம்படுத்தலுடன் ஒப்பந்தம் மீள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2024 செப்தெம்பர் 30 அளவில் செயற்திட்டத்தினை நிறைவுசெய்ய வேண்டியுள்ளது. | பம்ப் ஹவுஸின் மிகுதி பகுதியை நிறைவு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகளை முகாமைத்துவம் மேற்கொண்டு குறித்துரைக்கப்பட்ட பயன்பாட்டுக்கு விரைவில் இதனை பயன்படுத்த வேண்டும். |